Registered as a News Paper in Ceylon
P M G No. E A 59/300 of 1939.

# இந்துசாதனம்

விரோதி வருஷம் (1889) ஆவணி மாதம் 28 ம் உ ஆரம்பமானது

செவ்வாய் வெள்ளிதோறும் வெளிவருவது

மாசில் வீணையும் மாலை மதியமும், வீசுதென்றலும் வீங்கிளவேனிலும், மூசுவண்டறை பொய்கையும் போன்றதே ஈசனெந்தை யிணையடி நீழலே

[புத். - சுரு.] யாழ்ப்பாணம்:- கர ஞு சித்திரைமீ உக உ வெள்ளிக்கிழமை (4 மே 1951) [இல. - அ]

L. K. S. LEBBAY BROS
GOLD HOUSE

எல். கே. எஸ். லெப்பை பிரதர்ஸ்
தங்கமாளிகை
கன்னாதிட்டி, யாழ்ப்பாணம்.

## நாகபூஷணியம்மை கோவிற் கும்பாபிடேகம்

முன்னரே இப்பத்திரிகையில் வெளியிடப்பெற்ற பிரகாரம், நயினார் தீவு நாகபூஷணியம்மை கோயிற் கும்பாபிடேகம், சென்ற வியாழக்கிழமை (26-4-51) பகல் 10 மணிவரையில் நிகழ்ந்த புண்ணிய சுப முகூர்த்தத்தில், பன்னூற்றுக் கணக்கான அன்பர்கள் வழிபட, விதிப்படி இனிது நிறைவேறியது; பிரமஸ்ரீ. இ. வ. ச. பாலசுந்தரக்குருக்கள் அச்சமயத்திற் பிரதிஷ்டாசாரியராகவிருந்து கிரியைகளை விதிப்படி நடத்தினர். —அடிக.

இலங்கையின் மிகப் பெரிய
— நகை —
வியாபாரிகள்
= O =
தந்தி: "JEWELLERS"
போன்: 161.
விலாசம்:
63, கன்னாதிட்டி,
யாழ்ப்பாணம்.

## பலாங்கொடைப் பிரிவின் அரசாங்க இடைக்காலத் தேர்தல்

சேர் பிரான்சிஸ் மொலமொரையின் மரணத்தால் அரசாங்கசபையில் சேர்ந்த வெற்றிடத்தை, நிரப்புதற்கு பலாங்கொடைப்பிரிவில் நடைபெற்ற இடைக்காலத் தேர்வின் பேறு வருமாறு:- 1. திரு. ஜே குறுப்பு (ய. என். பி.) 22,165 2 திரு. பி. ஜோதிபாலா (எல். எஸ். எஸ். பி.) 13,767 3. திரு. ஸ்ரீஸ்காந்தம் (சுதந்திரவாதி) 960

# சிவப்பிரகாசர் வேண்டுவன எவை?

[ அ. தா. ப. திருஞானசம்பந்தன், திருவண்ணாமலை ]

(முற்றொடர்)

கானமே மருவும் விலங்கினுங் [கடையேன்
கற்பனை கற்றிலேன் விடய
ஞானமே யுடையே னதிஞரைக் [காணி
னுணிலே னுய்புகாறு ளதோ!

சோண சைலனே! மனத்தை மூடிய ஆணவ இருளோடு ஓ! இருளே! உன்னை இப்பொழுது உண்ணுமுக் கணவனுகிய அண்ணுமலைக் கடவுளால் நீக்குவேன் எனனும் சபதமொழி கூறினனுதலால், அடியேன் உன்னை அடைந்தனன். சபதம் தவறுமல் எனக்கு நீ அருள செய்வாயாக.

மூடக விருளோடுன்னை யின் றண்ணு
மூலையா சாலகற் றுவனென்
சூட்டு மொழியா னடைந்தனன் றமி [யேன்
சூள்வழு வாது நீபருள்வாய்!

சோணசைலனே! ஐம்புலச் சுருக்கமும், அறிவின் பெருக்கமும், நல்வினைத் தன்னலும், மூடர் கூட்டத்தை நீங்கியிருத்தலும், எக்காலத்தில் அருள் செய்து, அடியேனை உன்னுடைய அடிமையாய்ச் செய்து, அருள்செய்வாய்!

சுருக்கு மைம்புல னும, விரிக்குதேறி [வுச்
தன்னுகல் வினமுநீத் தகன்ற
பிருக்கு வெங்கபவ ரினமு மென் [றருளி
யென்னை நின்னடிமை செய் [தருளாய்.

மயல் நீக்கும் பேரறிவு நிலைத்தலும், உன்னுடைய அழகு பொருந்திய தாமரையில் அன்பு செய்யப்பெற்ற மனத்தையுங் கொண்டிருக்கின்ற உண்மையான தொண்டர்களுடைய கூட்டத்தில் என்னைச்சேர்த்து அருள் செய்வாயாக! சோணசைலனே.

நீக்குறு மயலு நிலைத்த பேரறிவு
நின்திரு வடிமலர்க் கன்புசெய்து
காக்குறு மனமு முடைய மெய்த் [தொண்டர்
கணத்திலு னென்னைவிடுத்தருளாய்.

சோண சைலனே! மனம் கலக்கமடைந்து இரண்டு கண்களும் இருளடைந்து, இரண்டு காதுகளும் செவிடாகிக் கோழையானது மேலெறி வாயால் பாய உயிர் போகும்போது உன்னுடைய வடிவத்தை என் மனத்தில் நினைக்கும் தன்மையை அடியேனுக்கு அருள் செய்வாயாக.

சிந்தனை கலங்கி யிணைவிழி யிருண்டு
செவிகளுஞ் செவிடு பட்டைம்மே
லுந்திட வுயிர்போம் பொழுதுநின் [வடிவ
முளங்கொளும் பரிசெனக் [கருளாய்.

உருத்திராக்க மாலையாகிய பேராபரணமே, அணிகலன் என்று விரும்பி உடம்பின்மேல் அணிந்து, வெண்மையான விபூதியினுல் அணியப்பெற்ற திரிபுண்டரக் குறியுடைய நெற்றியோடு உன்னை அடியேன் நேசமுள்ளபூசைசெய்யும்படி அருள செய்வாயாக. சோணசைலனே!

கண்டிகைக் கலனே கலனென [விழைந்து
காயமே லணிந்து வெண்ணீற்றுப்
புண்டரக் குற்சேர் நுதலொடு [நின்னையான்
பூசனை புரியுமாறு அருளாய்.

சோணசைலனே! போசையை நீக்கி உனது திருவடிகளில உண்மையான அன்பையடைந்து, நிலையில்லாத பிறவியைக் காணுகின்ற அடியார் கூட்டத்தை ஆராய்ந்து அடையும்படி பரிசுத்தம் பொருந்திய ஞானக் கண்களை அடியேன் பெறும் வழியைக் கொடுப்பாயாக!

வேணவா வகன்று நின்திரு வடியின்
மெய்ம்மையன் படைந்து பொய் [பிறவி
காணுவா ரினங்கண் டுறும்படி தூய
ஞான காட்டமபெற வருளாய்

சோண சைலனே! உன்னையே நோக்கி நீங்காத கண்களும் உன்னையே நினைக்கின்ற மனமும், உன்னையே வாழ்த்துகின்ற வாக்கும் எக்காலத்திலும் கொடுத்து உன் திருவடிகளில் என்னை வைத்து அருள செய்வாயாக!

நினையே நோக்கி விடாத [கட்புலனும்
நினையே நினைக்கு மெஞ்சகமு
நின்னையே துதிக்கு நாவு மெனறருளி
நின்திரு வடியினை வைத்தருளாய்!

சிவப்பிரகாசர் வேண்டுவன எவை என்று ஒருவாறு கண்டோம். சமயம் என்ற நன்றை னன்றுகோலாகக்கொண்டு அவர் பலவேண்டினும்,

(தொடர்ச்சி 3-ம் பக்கம்)

## உ
## தோத்திரம்

பொழுதறிக் தேத்துமுழுவலன்புடையோர் புந்தியங்கோயில்வீற் றிருப்போன்
முழுதொருங்குணர்ந்தோன் அகண்டிதன் அகம்பன் முத்தமிழ்மதுரைவாழ்முதல் [வன்
எழுதருங் கடவுளனைத்தையுங் காட்டியேவற்றினுந் தோய்வ தொன்றில்லான்
பழுதகன்றடுத்ததுணர்த்து வெண்பாடிகம் பத்திபாயாதவாறெனவே

இ—ள்: முத் தமிழ் மதுரை வாழ் முதல்வன் - முத்தமிழும் வளர்தற்கு இடமாயுள்ள மதுரைப் பதியிற் கோயில் கொண்டு எழுந்தருளிய லோகைகநாயகராகிய சோமசுந்தரக் கடவுளானவர்; பொழுது அறிந்து ஏத்தும் உழுவலன்பு உடையோர் - (வழிபாடுசெய்தற்குரிய) காலங்களில் தியானித்துத் துதித்து வழிபடும் பேரன்புடைய அடியார்களுடைய; புந்தி அம் கோயில் வீற்றிருப்போன் - மனத்தையே அழகிய கோயிலாகக் கொண்டு வீற்றிருந்து (அவர்களுக்கு) அருள் செய்யுமியல்பினர்; முழுது ஒருங்கு உணர்ந்தோன - (எண்ணில்லாத ஆன்மாக்கள் செய்யும் நல்வினை தீவினைகளை யறிந்து அவற்றின் பயனை நுகர்வித்தற்கு ஏற்ப எக்காலத்தும் எவ்விடத்தும் நிகழ்வன) முழுவதையும் ஒருங்கே உணரவல்லவர்; அகண்டிதன் - (அதற்கு ஏற்ப) எங்கும் வியாபித்திருக்கும் இயல்பினர்; அகம்பன் - ஆசைவறறவர் (நிர்விகாரி); எழுது அரும் கடவுள் - (உருவுங் குணமு மில்லாதவராகையால் ஒருவராலும்) எழுதுதற்கரியராய்த் தத்துவங்கடந்த பொருளாயுள்ளவர்; அனைத்தையும் காட்டி எவற்றினும் தோய்வது ஒன்று இல்லான் - (அங்ஙனமாயினும் உயிர்களின்மீது வைத்த பெருங் கருணையால் அவற்றின் பொருட்டுத்) (தனு கரண புவனபோகங்களாகிய) எல்லாவற்றையும் படைத்து அவற்றுள் எப்பொருளிலேனும் (விருப்பு வெறுப்புச் செய்து நுகர்ந்து) பொருந்துதல் சிறிதளவேனும் இல்லாதவர்; (ஓ மனமே, அப்படிப்பட்ட பெருமானிடத்தில் நீ அன்பு செய்து பேறுபெறல் கைகூடுவதாயிருக்கவும்); அடுத்தது உணர்த்து வெண்படிகம் என - தன்னுட் சார்ந்த பொருளை (அவ்வண்ணமே பிறர்க்கு) வெளிக்காட்டும் தூய பளிங்கைப்போல; பழுது அகன்ற - (நீ காமம் முதலிய) குற்றங்களெல்லாவற்றிலும் நீங்கித் தூய்மையுடையையாகி; பத்தி பாயாது ஆறு - (அந்தச் சோமசுந்தரேசர்மீது கொள்ளும்) பக்திக் கடலுள் குளித்துத் திளைக்காத காரணம்) என்னே!) எ—று.

பொழுது - காலை உச்சி மாலை முதலிய தியான பூசாதிகளுக்குரிய காலம். உழு பிறவிகளும் தொடர்பு உடையதாய் வரும் அன்பை உழுவலன்பு என்பர். புந்தி - புத்தி, மனம்; மெலித்தல் விகாரம் பெற்ற சொல. "நினைக்கை மும்பத வேழுரித்தவன், நினைப்பவர் மனங் கோயிலாக் கொண்டவன்" என்றார் அப்பர்சுவாமிகளும்.

அகண்டிதன், அகம்பன் இவை வட சொற்கள். (அ+கண்டிதன்) - அளவுக்குட்பட்ட பொருளல்லாதவர்; வியாபகர் என்றபடி; வியாபகத் தன்மையில்லாத பொருளெல்லாம் ஓர் அளவிற்கு உட்பட்டனவாம் (அளவு உடையனவாம்) என்பது நூல்முடிபு. அ+கம்பன் — அசைவு இல்லாதவர்; (கம்பம் - அசைவு); படைத்தல் காத்தலாதிய தொழில்களைச் சிவபெருமான் இயற்றுவது கரசரணாதி கருவி கொண்டல்ல; அவை அவரது சக்திமாத்திரத்தால் நிகழ்தலின், சிவபிரான் அசைவற்றவர் (= நிர்விகாரி) என்றபடி. நிர்க்குணப் பிரமமாயிருக்குந் தன்மையே சிவத்தின் சொரூப லட்சணமாதலின் "எழுதருங் கடவுள்" என்றார். தாம் சர்வவியாபியாயிருப்பினும், எல்லாவற்றையும் படைத்த உரிமையுடையவராயிருப்பினும் எப்பொருளிலாவது ஆசாபாசம் வைத்து உழல்பவர் அல்லர் என்பார் "அனைத்தையுங் காட்டி எவற்றினுந் தோய்வதொன்றில்லான்" என்றார். ஒன்று - சிறிதும் என்னும் பொருட்டு. 'வெண் படிகம்+என' என்று உவமையுருபு மரீஇக்கூட்டி யுரைக்கப்பட்டது. "என்னே!" என்னுஞ் சொல் இசையெச்சம். [70.]

## அநாதர்கள்

திக்கற்ற அநாதர் பலர் மாண்டுபோக நிட்டேதமுள்ள சிலர் அரசாங்க உதவிச் சம்பளம் பெறுகின்றனராம். இங்ஙனம் மூனுவத்தைபாகே பத்து என்றவிடத்து கிராமச்சங்கக் கூட்டத்திற் குறிப்பிடப்பட்டது. அக் கூட்டத்திற் சமூகமாயிருந்த பல அங்கத்தினர் இதை அங்கீகரித்ததுமன்றி உபகாரச் சம்பளம் பெறுவோரைத் தெரிவுசெய்வதில் பாரபட்சங்காட்டப்படுகிறதெனவும், எளியவர்களில் நிழும் காலதாமதத்தால் தகுதியுள்ள அநேக அநாதர் சம்பளம் பெருதொழிகின்றனரெனவும் குறிப்பிடப்பட்டது. இதுவிஷயத்தைப்பற்றித் தல ஆட்சித் தலைவர்மூலம் விண்ணப்பித்து இப்போதுள்ள நிலைமையைச் சீர்ப்படுத்தவேண்டுமெனத் தீர்மானிக்கப்பட்டது.

வாழ்க அந்தணர் வானவர் ஆனினம்
வீழ்க தண்புனல் வேந்தனு மோங்குக
ஆழ்க தீயதெல் லாம்அர னாமமே
சூழ்க வையக முந்துயர் தீர்கவே.


# இந்துசாதனம்

யாழ். கர ஹூ சித்திரை மீ உக உ வெள்ளிக்கிழமை


## யாழ்ப்பாண நாடெங்கும் வெளிச்சம்

இதுகாறும் செய்துவந்த ஒழுங்கின்படி காங்கேசந்துறைச் சீமெந்துத் தொழிற்சாலையி லிருந்து மின்சார வெளிச்சம் யாழ்ப்பாணப் பட்டினம் முழுவதுக்கும் சென்ற செவ்வாய்க்கிழமை தொடக்கம் (1-5-51) உதவப்படலாயிற்று. கைத்தொழில் கடற்றொழில்களின் மந்திரி திரு. ஜி. ஜி. பொன்னம்பலம், காங்கேசந்துறைச் சீமெந்துத் தொழிற்சாலையில் மின்சார வெளிச்சத்தை ஆரம்பித்துவிட, யாழ்ப்பாண நகரசங்கத் தலைவராகிய திரு. க. பொன்னம்பலம் அவ்வெளிச்சத்தை யேற்று பட்டினம் முழுவதும் பரவச் செய்தனர். காங்கேசந் துறையிலும் யாழ்ப்பாண நகரத்திலும் அவ்வச் சமயத்தில் பெருங் கூட்டங்கூடி ஆங்காங்குள்ள மக்கள் இரு பொன்னம்பலங்களையும் வாழ்த்திப் பாராட்டினர்கள்.

நாற்றைம்பது வருட காலம் வரை, பிருத்தானியர் இந்த இலங்கையை ஆண்டன ரெனினும் ஜெர்மனி யப்பான் முதலிய அந்நிய நாடுகளிலிருந்து பெருந்தொகையான சீமெந்தை எந்தநேரமும் இங்கே தருவித்து அதன் பொருட்டு இந்நாட்டிலுள்ள பெருந்தொகைப் பணத்தை அந்த அந்நியநாடுகளுக்குப் போக்கினரே யொழிய, அவர்கள் ஒரு சீமெந்துத் தொழிற்சாலையை இந்த இலங்கையில் எந்தப் பாகங்களிலாயினும் அமைக்க நினைத்திலர். காங்கேசந்துறைச் சீமெந்துத் தொழிற்சாலை இலங்கை மக்களுக்குப் பொதுவாகவும், இந்த யாழ்ப்பாண மக்களுக்குச் சிறப்பாகவும் பயன் தருவதாகும். இத் தொழிற்சாலை வாயிலாகக் காலகதியில யாழ்ப்பாணக்குடா நாடு முழுவதும் மின்சார வெளிச்சத்தைப் பெற்றுப் பெரும் பயன் அடையுமென திரு. ஜி ஜி. பொன்னம்பலம் அன்று கூறினர். நாடெங்கும் மின்சாரசக்தி கிடைக்குமானல், அந்நாட்டிலுள்ள கைத் தொழில், விவசாயத் தொழில் முதலியனவும் இனிது விருத்தியடைந்து வருமல்லவா? இந்த இலங்கையிலாக, வேறு எந்த நாட்டிலாக, பட்டினங்கள் மாத்திரமன்றிக் கிராமங்களிலும் ஏனைய இடங்களிலும் மின்சார சக்தி வியாபகமா யிருப்பதை நாம் அறிவோம். இதனாற்றான் காங்கேசன் சீமெந்துத் தொழிற்சாலை, யாழ்ப்பாண நாட்டிற்குச் சிறப்பாகப் பயன் தருவதென மேலே கூறினோம். காங்கேசந்துறையி லிருந்து யாழ்ப்பாணப் பட்டினத்திற்கு இப்பொழுது அமைக்கப்பட்ட பிரதான மின்சார இணைப்பின் இரு மருங்கிலுமுள்ள கிராமங்கள் சிறு பட்டினங்கள் முதலியவற்றிற்கும்விரைவில் மின்சாரம் உதவப் படுமாம், இவைகளுட் பிரதானமானவை மாவிட்டபுரம், தெல்லிப்பழை, மல்லாகம், சுன்னுகம், இணுவில், உடுவில் கோண்டாவில், கொக்குவில் முதலியனவாம். இவைகள் மாத்திரமல்லாமல், மானிப்பாய், வட்டுக்கோட்டை, ஆனைக்கோட்டை, சங்கானை, இளவாலை, வசாவிளான், அச்சுவேலி, தொண்டமானாறு, வல்வெட்டித்துறை, பருத்தித்துறை, புத்தூர், கோப்பாய் முதலிய சிறு பட்டினங்களுக்கும் கிராமக்களுக்கும் மின்சார சக்தி உதவப்படுமென அறியலானேம்; தென்மராட்சி, தீவுப் பகுதி முதலிய ஏனைய ஊர்களுக்கும் காலகதியில் மின்சார சக்தி உதவப்படும்.

யாழ்ப்பாண மக்கள் இன்னமும் வாளாவிராது "காற்றுள்ள போதேதூற்றிக்கொள்ளவேண்டும்" என்ற முதுமொழியைக் கடைப்பிடித்து வெளிச்சத்தை மாத்திரம் பெற்றுக்கொள்ளுவதோடமையாது, இம்மின்சார சக்தினை கைத்தொழில் விவசாயத்தொழில்களிலும் ஈடுபடுத்தி, பெரும்பயன் பெற்று இனிது வாழ்வார்களாக.

### 7500 எக்கர் நிலத்தில் கரும்புச் செய்கை

வடமத்திய மாகாணத்தில் தம்பன்கடவைப் பிரிவைச் சேர்ந்த கிரித்தல என்னுமிடத்தில் கரும்பு வயல் ஆக்கப்படும் நோக்கமாக 7500 எக்கர் நிலத்தை அளவு செய்து வகுத்துக்கொள்ளுதற்கு அளவைப் பகுதியார் ஆரம்பித்திருக்கின்றனர். கிரித்தலப் பகுதியிலுள்ள நிலம் பெரும்படியான கரும்புச் செய்கைக்கு ஏற்றதென மதிப்பிடப்படுகிறது. இங்கே நிகழ்த்தப்பட்ட பரிசைதான் இவ்விடம் மற்றெவ்விடத்திலும்பார்க்க மிக்க விளைவைத் தரத்தக்கதென்பதை அத்தாட்சிப்படுத்தின. அவ்வேலைவாய்த்திட்டம் இறைவேறுங் காலத்தில் தொடங்குவதற்கென அரசாங்கம் உத்தேசித்திருக்கும் சீனிக் கைத்தொழிற்சாலைக்கு இப்போது திறக்கப்படும் கரும்பு வயல் மிக ஆதாரமாயிருக்கும். கல்லோயா நீர்ப்பாசனத்தில் 40,000 ஏக்கர் நிலம் கரும்புச் செய்கைக்கு உபயோகப்படுத்தப்படுமெனவும் 65,000 தொன் சீனி உண்டாக்கப்படலாமெனவும் எதிர்பார்க்கப்படுகிறது. ஒல்லாந்து தேசத்தவராகிய சீனித்தொழில் நிபுணர் டக்டர் வான். டி. டில்லுபூசின் என்பவர் கரும்புச் செய்கைக்கு ஏற்ற ஸ்தாபனத்துக்கான வழிவகைகளை அரசாங்கத்தின்பொருட்டு வகுத்துக்கொடுப்பார்.

# இலங்கை இந்திய தொடர்பு

## "யாழ்ப்பாணம் என்ற சொல்லிலேயே தமிழ்ப் பண்பாடு விளங்குகிறது"

—திரு. ஆர். பி. சேதுப்பிள்ளை

### ஆன்மநேய ஒருமைப்பாடு

இன்னும் ஆன்மநேய ஒருமைப்பாடும் இலங்கைக்கும், தமிழகத்திற்கும் உண்டு சைவ சமய நாயன்மார்களில் தேவாரம் பாடிய பெரியோர்கள் இலங்கையிலுள்ள சிறந்த சில ஸ்தலங்களைப் பாடியுள்ளார்கள். கடலருகேயுள்ள திருக்கோணமலையைப் பாடினர் திருஞான சம்பந்தனர். மாதோட்டம் என்னும் நன்னகரில் அமைந்த மாதொருபாகனைத் தொழுது பாமாலை பாடினர். திருஞான சம்பந்தரும் சுந்தரரும் தமிழ் நாட்டிலுள்ள முருகவடியார்கள் இலங்கையிலுள்ள கதிர்காமத்தை நினைக்குந்தோறும் காதலாகிக் கசிந்து கண்ணீர் பெருக்குவர். அப்படியே ஈழநாட்டிலுள்ள சிவனடியார்க்குச் சிதம்பரமே சிறந்த திருக்கோயில். அன்னார் தில்லைமன்றிலே திருநடம் புரியும் "செல்வன் கழலேத்தும் செல்வமே செல்வம்" எனச் சிந்தையாரப் போற்றுவர். முருகப் பெருமானுடைய படைவீடெனாகப் போற்றப்படும் ஆறு பதிகளையும் அகமகிழ்ந்து வந்தவர். அவற்றுள் "உலகம் புகழ்ந்த ஒங்குயர் விழுச்சீர் அலைவாய்" என்று திருமுருகாற்றுப்படையில் புகழ்பெற்ற திருச்செந்தூரை நினைந்து நெக்கு நெக்குருகுவர். எனவே சமய நெறியிலும் தமிழ் நாட்டுக்கும், இலங்கைக்கும் நேசமுண்டென்பது இனிது விளங்கும். இனி செந்தமிழ் இலக்கியத்தைப் பேணி வளர்த்த பெருமையும் ஈழநாட்டிற்கு உண்டு மெய்வருத்தம் பாராது பழைய ஏட்டுச்சுவடிகளை ஆராய்ந்து தொல்காப்பியம், இறையனாரகப்பொருள், வீரசோழியம், இலக்கண விளக்கம் ஆகிய இலக்கண நூல்களையும், கலித்தொகை வீரசிகம், சூளாமணி முதலிய சுவைமிகுந்த இலக்கிய நூல்களையும் முதன் முதலாக அச்சிட்டுத் தமிழகத்தாருக்கு உதவிய பெருமை யாழ்ப்பாணத்தில் தோன்றிய தாமோதரம் பிள்ளை யவர்களுக்கே உரியதாகும். இன்னும் சுருந்தமிழ்ப் புலமையும், சட்டுரை வன்மையும் வாய்ந்த தமிழ்மொழிக்கும், சிவநெறிக்கும் அரும்பெரும் தொண்டு செய்த ஆறுமுகநாவலரை அறியாதார் இத்தமிழுலகில் உளரோ? அந்நாவலர் பெருமான் யாழ்ப்பாணத்து நல்லூரிலே பிறந்து தில்லையம் பதியிலே வாழ்ந்து எல்லையற்ற புகழ் எய்தினர். அங்கு அவர் நிறுவிய கல்லூரியும், அறநிலையங்களும்

தொடர்ச்சி 3-ம் பக்கம்

# நமது சோதிடப் பகுதி

ஸ்ரீ ராதாகிருஷ்ணன் கணிப்பது

## உங்களுக்குரிய இந்தவாரப் பலன்கள் (6-5-51—12-5-51)

**மேடராசி** அச்சுவினி, பரணி, கார்த்திகை முதற்கால்.

இவ்வாரத்தில் பணக்கஷ்டமும் மனச்சஞ்சலமும் உண்டு. நற்குணமையால் அதிக நன்மையடைய முடியாது. சுற்றமித்திரர்களை அதிகம் கஷ்டப்படுத்தவொண்ணுது. தேகசுகத்தைப் பேணவும்.

**இடபராசி** கார்த்திகை 2, 3, 4-ம்கால்கள் ரோகிணி, மிருகசிரீடம் 1, 2-ம் பாதம்.

நிச்சயமாக இந்தக்கிழமையில் கொஞ்சப்பணம் வந்து சேரும். சொந்த விஷயங்களும் சுகமாக நடைபெறும். குடும்பத்தில மகிழ்ச்சி உண்டு.

**மிதுனராசி** மிருகசிரீடம், 3, 4, திருவாதிரை, புனர்பூசம் 1, 2, 3,

இடம்விட்டு மாறவேண்டி வரும். இல்லையேல் சிறு பிரயாணம் செய்ய வேண்டி வரும். சுற்றமித்திரர்களால் பெரும் உதவியுண்டு, வெற்றியும் புகழுமுண்டு.

**கடகராசி** புனர்பூசம் 4-ம் பாதம், பூசம், ஆயிலியம்.

இந்தவாரம் முடிவதற்கு முந்தி ஒரு நல்ல சன்மானம் கிடைக்கும். கருமங்களைத் தவணையிடாமல் உடனுக்குடன் செய்வதால் நன்மையுண்டு. ஆண்களாற் பெண்களுக்கும் பெண்களால் ஆண்களுக்கும் பரஸ்பர நன்மையுண்டு.

**சிங்கராசி** மகம், பூரம், உத்தரம், 1-ம் பாதம்.

இந்த வாரத்தில் ஏதும் சங்கடத்தில் அகப்பட நேரும். அநியாயமான பழி வார்த்தைகள் கேட்க நேரும். விபரீதமாக நினைப்பார்கள். உத்தியோக விஷயத்தில் பிணக்கிக்கொள்ளாமல் சண்டையிடாமல இருக்கவேண்டும்.

**கன்னிராசி** உத்திரம் 2, 3, 4-ம் பாதம் அத்தம், சித்திரை 1, 2-ம் பாதம்.

பணக்கஷ்டமுண்டு. கிழமையின் முதனுளில் அவதானமாக நடந்துகொள்க. புதிய கருமங்களைச் செய்வதற்கு வாய்த்த வாரமல்ல. சில காலத்திற்குத் தேக சுகத்தைப் பேணவும்.

**துலாம்** சித்திரை 3, 4-ம் பாதம் சுவாதி விசாகம் 1, 2, 3-ம் பாதம்.

சனசமூக சம்பந்த விஷயமாக இவ்வாரம் நல்லாயில்லை. திங்கட்கிழமை தொடக்கம் புதன்கிழமை முடிய சாவதானமாக நடந்துகொள்ள வேண்டும். குடும்பப்பிணக்கும் சண்டையிடுதலும் நேரும்.

**விருச்சகராசி** விசாகம் 4-ம் பாதம் அனுஷம், கேட்டை.

இவ்வாரத்தில் எதிரிகளை வெல்லலாகும். புதன்கிழமை பிற்பகல் தொடக்கம் வெள்ளிக்கிழமை முடிய மன ஆறுதல் இல்லையாகும். பிறருடைய கருமத்திற் தலையிட்டுச் சங்கடப்படவேண்டி நேரும்.

**தனுராசி** மூலம் பூராடம் உத்தராடம் 1-ம் பாதம்.

சுகயீனம், எல்லாவற்றையும் குழப்பியிடும், சொந்தக்காரரே மாருய் நிற்பர். வாரத்தின் கடைசியில் செய்த ஒழுங்கை நம்பவேண்டாம்.

**மகராசி** உத்தராடம் 2 3 4-ம் பாதம் திருவோணம், அவிட்டம் 1, 2-ம் பாதம்

இந்தவாரத்தில் புத்தி சொல்பவர்களினும் கோபிக்க வேண்டி வரும். சிமுத்திரம் கத்தர்கள் கோபம் மூட்டக்கூடும், ஆறவுமகூடும்.

**கும்பராசி** அவிட்டம் 3, 4-ம் பாதம் சதயம், பூரட்டாதி 1-ம் 2-ம் 3-ம் பாதம்

சனசமூகமாக நல்லவாரம். புது முயற்சிகளினுல் நினைத்த காரியம நிறைவேறும், பொருள் வரவுண்டு. எதிரிகளுக்கு வீழ்ச்சியுண்டு.

**மீனராசி** பூரட்டாதி 4, உத்தரட்டாதி, ரேவதி.

ஒரு முற்றில்லாத வாரம். ஒரு கருமமும் நிச்சயமாய் முடிவதாது. எவரோடும் பிணக்குறவேண்டி நேரும். கண்ணேய் ஏதும் வரக்கூடும்.

## திருச்சி ரேடியோ

※ இசைத்தட்டு

**சனி மே 5**

காலை 7 10 தோரம்பம் * 7 15 தமிழில்செய்தி 7 30 கல்லிடைக்குறிச்சி லக்ஷ்மி நாராயணன் பாட்டு 8 ஆங்கிலத்தில்செய்தி 8 15 சித்ரகானம் * 8 30 முடிவு.

1 நேயர்கள்கேட்டவை * 1 30 ஆங்கிலத்தில்செய்தி 1 40 ஹிந்தியில்செய்தி 1 50 ஹிந்தி பஜன் * 2 தமிழில்செய்தி 2 10 சித்ரகானம் * 2 45 முடிவு.

5 30 ஜலதரங்கம் 5 45 இசைப்பயிற்சி 6 ஆங்கிலத்தில்செய்தி 6 10 அறிவிப்புகள் 6 15 ரேடியோ வாத்தியகோஷ்டி 6 30 கிராமநிகழ்ச்சிகள் 7 15 தமிழில்செய்தி 7 30 சித்ரகானம் * 7 45 செம்மங்குடி சீநிவாசய்யர் பாட்டு 9 ஆங்கிலத்தில்செய்தி 9 15 ஆங்கிலத்தில பேச்சு 9 30 வட இந்திய சங்கீதம் ஒலிப்பதிவு 10 முடிவு.

**ஞாயிறு மே 6**

காலை 7 10 தோரம்பம்* 7 15 தமிழில்செய்தி 7 30 இசைச்சுவடி ஒலிப்பதிவு 8 ஆங்கிலத்தில்செய்தி 8 15 சித்ரகானம் * 8 30 முடிவு.

12 டி ஆர் நவநீதம் பாட்டு 12 45 நாட்டியசங்கீதம் * 1 மணிமலர் 1 30 ஆங்கிலத்தில செய்தி 1 40 ஹிந்தியில் செய்தி 1 50 குன்னக்குடி வெங்கடராமய்யர் * 2 தமிழில் செய்தி 2 10 சித்ரகானம் * 2 30 சென்னை இரசநிகழ்ச்சி 3 முடிவு.

மாலை 5 30 ஆர் கிருஷ்ணமூர்த்தி ஐயர் ஆர் கமலாவதி இருவீணை 5 45 டி ஆர் நவநீதம் பாட்டு 6 ஆங்கிலத்தில் செய்தி 6 10 அறிவிப்புகள் 6 15 நேயர்கள்கேட்டவை * 6 30 கிராமநிகழ்ச்சிகள் 7 15 தமிழில்செய்தி 7 30 சித்ரகானம்* 7 45 இவர்கள் இன்றி பேச்சு 8 நாடகத்தின் வெற்றி நாடகம் 8 30 எஸ் பாண்டுரங்க பாகவதர் பாட்டு 9 ஆங்கிலத்தில்செய்தி 9 15 ஆர் கிருஷ்ணமூர்த்தி ஐயர், ஆர் கமலாவதி இரு வீணை 10 முடிவு.

**திங்கள் மே 7**

காலை 7 10 தோரம்பம் 7 15 தமிழில் செய்தி 7 30 கும்பகோணம் என் ஆர் ஸ்ரீநிவாச ஐயங்கார் பாட்டு ஆங்கிலத்திலசெய்தி 8 15 சித்ரகானம் 8 30 முடிவு

1 நேயர்கள் கேட்டவை* 1 30 ஆங்கிலத்திலசெய்தி 1 40 ஹிந்தியில்செய்தி 1 50 ஆர் பிச்சமணி வீணை 2 தமிழிச் செய்தி 2 10 கும்பகோணம் என் ஆர் சீநிவாசஐயங்கார் பாட்டு 2 45 முடிவு

மாலை 5 30 சே எம் சந்திரராவ் வயலின் 5 45 இசைப்பயிற்சி 6 ஆங்கிலத்தில் செய்தி 6 10 அறிவிப்புகள் 6 15 திருச்சிவாத்யகோஷ்டி 6 30 கிராம நிகழ்ச்சிகள் 7 15 தமிழில்செய்தி 7 30 சித்ரகானம்* 7 45 புத்தகவிமர்சனம் 8 தானவாத்திய கச்சேரி 8 15 சே எம் சந்திரராவ் வயலின் 8 30 குரல்வளை* 9 ஆங்கிலத்தில்செய்தி 9 15 திருவெண்காடு பி எஸ் செல்வரத்னம் பாட்டு 10 முடிவு.

**செவ்வாய் மே 8**

காலை 7 10 தோரம்பம்* 7 15 தமிழில்செய்தி 7 30 சரோஜினி ஜகந்நாதன் பாட்டு 8 ஆங்கிலத்தில்செய்தி 8 15 சித்ரகானம்* 8 30 முடிவு.

1 சோமனவல்லி, ஸ்ரீநிவாசன் வயலின் * 1 15 பெண்ணுலகம் 1 30 ஆங்கிலத்தில்செய்தி 1 40 ஹிந்தியில் செய்தி 1 50 குரல்வளை* 2 தமிழில்செய்தி 2 10 சரோஜினி ஜகந்நாதன் பாட்டு 2 45 முடிவு.

மாலை 5 30 எச் எஸ் மதுராந்தகம் கோட்டுவாத்யம் 5 45 இசைப்பயிற்சி 6 ஆங்கிலத்திலசெய்தி 6 10 அறிவிப்புகள் 6 15 ஆர் உதயசங்கர் பாட்டு 6 30 கிராம நிகழ்ச்சிகள் 7 15 தமிழில்செய்தி 7 30 வநாஜநாதன் * 7 45 செம்பொன்னார்கோயில் ஆர். கோவிந்தசாமிபிள்ளை சகோதரர்கள் நாகஸ்வரம் 9 ஆங்கிலத்தில் செய்தி 9 15 ரவீந்த்ர சங்கீதம் ஒலிப்பதிவு 10 முடிவு.

அகில இலங்கைச் சைவ இளைஞர்

## மத்திய மகாசபை

( யாழ்ப்பாணம் )

டி சபையின் 12 வது வருடாந்த விழா சிலக்கவிமணி C. K. சுப்பிரமணியமுதலியார் B. A. தலைமையில் 1951 மே 20ம் 21ம் 22ம் தேதிகளிலே யாழ்ப்பாணம் இந்துக் கல்லூரித் தமிழ் வித்தியாசாலையிலும் 24-ம் திகதி ஏழாலை மடத்திலும் சிறப்பாக நடைபெறும். தருமபுரவாதீனப் புலவர், சித்தாந்தரத்னாகரம் வித்துவான் முத்து. சு. மாணிக்கவாசக முதலியார் முதலாம் பல பெரியோர்கள் பேசுவார்கள். தேவாரப்பண்மணி சோ. செல்வக்கணபதி தேசிகர் முதலாம் பலர் சிறந்த பக்கவாத்திய சகிதம் தமிழ்மறையோதுவார்கள். நிகழ்ச்சி நிரல்பெற விரும்புவோர் தங்கள் விலாசங்களைத் தெரிவித்தால் அனுப்பப்படும்.

வே. சங்கரப்பிள்ளை
காரியதரிசி
தெல்லிப்பழை P. O.

## இலங்கை இந்தியத் தொடர்பு

2-ம் பக்கத் தொடர்ச்சி

இன்னும் நடைபெற்று வருகின்றன. யாழ்ப்பாணத்தில் தோன்றிய மற்றொரு புலவர் சபாபதி நாவலர். தமிழகத்திலுள்ள திருவாவடுதுறைமடம் அவரை ஆதீன வித்துவானாக நியமித்துச் சிறப்புறச்செய்தது. இன்னும் முத்தமிழ் சடுகாயகமாக விளங்கும் இசைத்தமிழுக்கு இக்காலில் இணையற்ற தொண்டுசெய்த புலவரும் இந்நாட்டவரேயாவர். பழந்தமிழ் நாட்டில் சிறந்த இசைக்கருவியாக விளங்கிய யாழின் திறத்தையும், இசையின் நலத்தையும் ஆராய்ந்து யாழ்நூல் என்னும் பெயரால் இசையுலகத்திற்கு அரியதோர் விருந்தளித்த விபுலானந்த அடிகளை அறியாதார் அறியாதாரே.

## சிவப்பிரகாசர் வேண்டுவன எவை?

1-ம் பக்கத் தொடர்ச்சி

அவை அனைத்தும் எல்லோர்க்கும் மிகமிக வேண்டுவனவன்றோ! இறைவனுக்குப்பாமாலை இயற்றிப் பூமாலை சூடுவதையும, அடியார்களைச் சிறப்புச் செய்வதையும், கூற்றுவன் வருவதற்குமுன் தன்னைப்பற்றி உணர வேண்டிய தன்மைகளையும், உலகியலறிவும - பொது இயல் அறிவும, இறைவன் தின்பவடிவத்தைத் தன் மனத்தகத்தே எப்பொழுதும் இருத்தி வைக்க அருளையும், உருத்திராக்கமும், திருநீறும் அணியுப் பேற்றையும், பேரிடும்பை அளிக்கும் பேராசை நீக்கி இறைவன் திருவடிகளை அடைதலும் அன்றி, அவர் வேறொன்றையும் வேண்டவில்லை அல்லவா! என்னே அவர் மனத்திட்பம்! எனனே அவர் மாண்பு!

சைவ சமயத்தில் உள்ளவர்கள் இன்று எத்தனைபேர் சிவப்பிரகாசர் வேண்டியவற்றை, மனமாரவேண்டி, வாயாரப் பா இசைக்கா விட்டாலும், சிந்தனையாவது செய்கிறார்கள் என்று கண்டால் விரல்விட்டு எண்ணிவிடலாமல்லவா? சமயத்தில் உள்ளவர்களோ, சமயத்திற்கு இடையூறு விளைவிக்கிறார்கள் என்று சுருங்கச் சொல்லினால் அது நியாயமாகத்தானே இருக்கும். சமயம் படித்தவர்களிடையேயுங்கூட, ஏட்டளவில் கிறகிறந்த ஒழிய, பெரும்பாலும் நடைமுறையிற் கொள்ளப்படவில்லை என்று வாய்விட்டு ... சொல்லலாம். அடிக்கின்ற காற்றெல்லாம் ஒரே காற்றுதானோ? அதின் தென்றல், வாடை, கோடை எனப் பாகுபாடில்லையா! அவ்வக்காற்றும் தன்மையில் மாறுபடவில்லையா? அதுபோல சமயத்தில் காலப்போக்கில் நுழைக்கப்பெற்ற திருவிழாக்கள் அனை[illegible] தென்றற்காற்றுப் போன்றது[illegible]ம், இன்று வாடைக் க[illegible]வே மாறியுள்ளன.

(வரும்)

## தமிழ் வளர்ச்சிக் கழகம்

"உயர்ந்த கவிதை வளம் நிறைந்தது நம் தாய்மொழியாகிய தமிழ் தெய்வத் தமிழ்க்கவிதை மற்ற மொழிக் கவிதைகளோடு சமானமான நிலையிலும் அதற்கு மேலாகவும் வைத்து எண்ணக்கூடிய பெருமை வாய்ந்தது. அந்தவகையிலே நாம் நல்ல அதிர்ஷ்டம் உடையவர்கள். தமிழ்மொழியின் சிறப்பிற்குக் காரணம் முக்கியமாக அதன் கவிதை என்றே கூறும்படி அவ்வளவு சிறந்த கவிதையை நாம பெற்றிருக்கிறோம். ஆனால் எந்த மொழியின் வளர்ச்சிக்கும் கவிதைமட்டும் போதாது. இக்காலத்திலே ஒரு மொழியானது அதைப் பேசும் மக்களுக்குப் பெரிதும் பயன்பட வேண்டுமானால் அதிலே எல்லாக் கலைகளிலும் சிறந்த நூல்கள் இருக்கவேண்டும். விஞ்ஞானம், மனத்தத்துவம் என்றிப்படிப்பட்ட பலவகையான அறிவியல் துறைகளிலும் உரைநடை நூல்கள் நூறுக் கணக்காக வெளியாக வேண்டும். அவ்வாறு நூல்கள் வெளியாவதற்கு ஊக்கம் அளிக்கும் முக்கிய நோக்கத்தோடு தமிழ் வளர்ச்சிக்கழகம் 1946-ம் ஆண்டு டிசம்பர் மாதம் 17-ம் தேதி திரு. தி. சு. அவினாசிலிங்கம் செட்டியார் அவர்களின் நன் முயற்சியால் ஆரம்பிக்கப்பெற்றது. எந்தத் துறையில் நல்ல நூல் வெளியானாலும் அதைப் போற்ற வேண்டும் என்பதும், அதை எழுதிய ஆசிரியருக்கு உற்சாகம் அளிக்க வேண்டும் என்பதும் இக்கழகத்தின் நோக்கமாகும். அதற்காக ஆண்டுதோறும் பரிசும், பரிசுப் பத்திரமும், பாராட்டுப் பத்திரமும் வழங்கப்படுகின்றன.

அவ்வாறு வழங்குவதற்கு நூல்கள் வெளியாகும் பல துறைகளும் பன்னிரண்டு பெரும் பகுதிகளாகப் பிரிக்கப்பட்டுள்ளன. அவை: 1. கவிதை இசைப்பாடல். 2. கணிதம், வான நூல், பொறியியல், 3. சிறுவர் இலக்கியம், 4. வைத்தியம், சுகாதாரம் 5. கல்வி, தத்துவம் மனத்தத்துவம், 6. இயற்கைநூல் விவசாயம். 7. சிறுகதை. 8 நாவல், நாடகம். 9. ஆராய்ச்சி. 10. கட்டுரை 11. சரித்திரம் பொருளியல், அரசியல். 12. பௌதிகம், இரசாயனம் என்பனவாகும்.

இவற்றில் முதல் ஆறு பகுதிகள் ஒரு ஆண்டிலும் மற்ற ஆறு பகுதிகள் அடுத்த ஆண்டிலும் பரிசீலனைக்கு எடுத்துக்கொள்ளப்படும். ஆகவே ஒரு துறையில் வெளியான நூல்கள் இரண்டாண்டுகளுக்கு ஒருமுறை பஞ்சாயத்தார்களால் ஆராயப்படுகின்றன. ஒரு பகுதியில் சிறந்ததாகக் கருதப்படும் நூலுக்கு 500 ரூபாய் பரிசும், பரிசுப் பத்திரமும் அளிக்கப்பெறுகின்றன. அதற்கு அடுத்த ஸ்தானத்தில் உள்ள நூல்கள் பாராட்டுப்பத்திரங்கள் பெறுகின்றன. பரிசுத் தொகையை சென்னை அரசாங்கத்தார் உதவ அன்போடு ஏற்றுக்கொண்டிருக்கிறார்கள்.

இவ்வாறு பரிசும், பத்திரங்களும் வழங்குவதை நிமித்தமாகக் கொண்டு ஆண்டுதோறும் தமிழ்த் திருவிழாக்கள் கொண்டாடப்பெறுகின்றன. முதல் விழா பாண்டியர் தமிழ் வளர்த்த மதுரையிலும், இரண்டாவது விழா மனுமுறை கண்ட சோழனுடைய திருவாரூரிலும், மூன்றாவதுவிழா சேர நாட்டுடன் இயைபுடைய கோயமுத்தூரிலும் சிறப்பாகக் கொண்டாடப் பெற்றன. ஆயிரக் கணக்காக மக்கள் அவற்றிலே கலந்துகொண்டார்கள். தமிழ்த் திருவிழா வழக்கமாக இரண்டு நாட்களுக்கு நடைபெறுகின்றது. இலக்கியம், விஞ்ஞானம், அறிவியல் முதலிய பலவேறு துறைகளின் அறிஞர்கள் சொற்பொழிவுகளும், மாலை நேரங்களிலே இன்னிசை நாடகம் ஆகிய கலை நிகழ்ச்சிகளும் அதில் முக்கிய அம்சங்களாகும். திருவிழாவை யொட்டி ஒரு கலைக் கண்காட்சியும் நடைபெறுகின்றது. இவ்வாறு தமிழ்த் திருவிழா ஒவ்வொரு வருஷமும் மக்கள் எதிர்பார்த்திருக்கும் ஒரு முக்கிய விழாவாகி விட்டது.

தமிழ் வளர்ச்சிக் கழகம் வேறொரு மிக முக்கியமான பணியை மேற்கொண்டிருக்கிறது. 1947-ம் வருஷம் ஆகஸ்டு மாதம் 15-ந் தேதி இந்திய சரித்திரத்திலேயே ஒரு பெருமை வாய்ந்த நாளாகும், அன்றுதான் நாடு சுதந்திரமடைந்தது. அந்த நாளன்று கழகத் தலைவர் திரு தி. சு. அவினாசிலிங்கம் செட்டியார் அவர்கள் தமிழில் கலைக் களஞ்சியம் ஒன்று (என்சைக்கிளோப் பீடியா) இயற்ற வேண்டும் என்றும், அதற்கு மக்கள் உதவ வேண்டுமென்றும் ஒரு வேண்டுகோள் விடுத்தார்கள். மக்களும் அரசினரும் அதற்கு ஆதரவுதர முன்வந்தனர். ஆங்கிலத்திலும், மற்றை மேல்நாட்டு மொழிகளிலும் சிறந்த கலைக் களஞ்சியங்கள் இருக்கின்றன. அவற்றின் மூலம் பௌதிகம், இரசாயனம் முதலிய இரசாயனத் துறைகளிலும், மற்றைக் கலைத் துறைகளிலும் எளிதாக விஷயங்களைப் பற்றித் தெரிந்துகொள்ளலாம். அவ்வாறான நூல் ஒன்று தமிழில் இருக்குமானால் அது தமிழ்மக்களின் அறிவு வளர்ச்சிக்குப் பெரிதும் உதவியாக இருக்கும்"

இவ்வாறு தமிழ் வளர்ச்சிக் கழகம் பல துறைகளிலே மொழிவளர்ச்சிக்கான சேவைகளைச் செய்து வருகிறது.


இன்று நடைபெறும்! இன்று நடைபெறும்!!

# கோகியா பாஷா


உலகப் பிரசித்திபெற்ற மந்திரவாதி!

இவர், தம் கண்களிரண்டும் இறுகக் கட்டியபடி
யாழ்ப்பாண நகர மண்டபத்திலிருந்து
பெரியகடைத் தெருவிதியால் இன்றைக்கு
(4-5-51) பி. ப 5 மணி தொடக்கம்
6 மணிவரை சைக்கிளில் காணிவல் மைதானத்தை
நோக்கி வேகமாக ஓடிவருவார்
இன்றிரவு 8-30 மணி தொடக்கம்

இந்த மே ௴ 13 ந் திகதி வரையும் ஒவ்வோரிரவும்
அந்த அற்புதமான மாந்திரீகர் யாழ்ப்பாணம் இந்துக்கல்லூரிக்
காணிவல் நிலயத்தில்
2½ மணித்தியாலத்திற்குக் குறையாமல் பல அற்புத வித்தைகளைச் செய்வார்
அரிய சந்தர்ப்பத்தை இழந்துவிடாதீர்கள்

பிரவேசக் கட்டண விதம்
ரூபா 4, 2.
சிறுபிள்ளைகளுக்கு அரை விதம்

இராணி "பிரண்ட்"



13½ அங்குலம் 14 அங்குலம்

நல்லிக்கோட்டை ஓட்டுக் கம்பனியாரால் ஆக்கப்படும்

தொளுக்கி ஓடுகள்

ஏனைய ஓடுகளைக் காட்டிலும் நீடிய காலத்திற்கு உபயோகப்படுவன; கசிவில்லாதன. அரசினர்க்குரிய ஸ்தாபனங்களிலும் இந்தியாவிலும் இலங்கையிலுமுள்ள மாளிகைபோன்ற வீடுகளுக்கும் உபயோகிக்கப்படுவன

ஒருமுறை வாங்கி உபயோகித்துப் பார்க்கலாம்

V. ராஜசேகரம் சேகரம் அன்ட் சன்ஸ்

சொந்தக்காரர் 74/4 ஆஸ்பத்திரிவீதி யாழ்ப்பாணம்

## யாழ்ப்பாணம் ஐக்கியலாபநிதி

1918-ம் ஆ ஸ்தாபிதமானது.

வங்கிக்காரர் மூலநிதி 8 லட்சம் ரூபா.

இதுவரையிற் கொடுக்கப்பட்ட பங்குப் பணம் ரூபா

134,3670

100 ரூபா விகிதமான 8000 பங்குகள்

பங்குப்பணங் கட்டுமுறை.

மாசமொன்று 1 ரூபா விகிதமாக 75 மாசகாலத்திற்கு மாசந்தோறும் கட்டப்படவேண்டியது. குறித்த காலமுடிவில பங்கொன்றுக்கு ரூபா 100 திருப்பிக்கொடுக்கப்படும். பங்குகள் எந்த நேரமும் வாங்கலாம்.

தினசரிப் பற்றுவரவு

சேகரத்த சராசரி 500 ரூபாவுக்குக் குறையாமல் இருக்குமானல் ஒரு விகித வட்டியுடன் தினசரிப் பற்றுவரவு செய்யலாம்

தவணை வரையறுக்கப்பட்ட க்ஷேமப்பணம்

க்ஷேமப்பணம் 3 மாசம, 6 மாசம், 9 மாசம், 12 மாசம் என்னும் காலங்கள் வரையறுத்து எற்படும் வட்டியும் முறையே 1 விகிதம், 2 விகிதம் 4 விகிதம் 6 விகிதமாகக் கொடுக்கப்படும்.

உண்டியல்கள்

கொழும்பிலுள்ள "நாஷனல்" வங்கியிலும் "இம்பீரியல்" வங்கியிலும் இந்தியாவிலுள்ள பிரதான பட்டினங்களிலும் மாற்றத்தக்க விதமாகக் கொடுக்கப்படும். தொடுவாய் இராச்சியப் பகுதியிலுள்ளவர்களுக்குக் கொடுக்கவும் வாங்கவுமான விசேஷ ஒழுங்குகள் செய்யப்பட்டிருக்கின்றன.

இந்தியாநோட்டு வட்டத்திறகு மாற்றிக்கொடுக்கப்படும்.

கடன்.

நகைகள் ஈடுவைத்துக்கொண்டு கடன் கொடுக்கப்படும். வட்டி 9 விகிதம் அறவிடப்படும். (இடுவைத்தவர்கள்) முதலையும் பாகம்பாகமாகக்கொடுக்கலாம். இன்னும் வேண்டிய விபரங்களை என்மூலமாக அறிந்துகொள்ளலாம்

S. கனகசபை

சிறுப்பர்.

Std 14 20-11-46—20-11-49

யாழ்ப்பாணம் இந்துக்கல்லூரி

60-ம் ஆ வச்சிர விழா

## கார்ணிவல்

மே மீ 2 ந்உ — 13 ந்உ

உலகப் பிரசித்தி பெற்ற மாயாவி

கோஜியா பாஷாவின்

மாயாஜாலங்கள் ஆடல்பாடல்கள் அருங்கலைக்காட்சிகள்

மின்சாரதீப வேடிக்கை விநோதங்கள்

உள்ளங் கவரும் இன்னும் அனேக காட்சிகள்!

## பிரகடனம்

திருவாதவூரடிகள் புராணம்

உரையாசிரியர்: ம. க. வேற்பிள்ளையவர்கள் செய்த பொழிப்புரையுடன்

விலை ரூபா 2-00

பிரதோஷவிரத மான்மியம் (புதிய பதிப்பு)

சிவவிரதங்களுட் சிறந்ததாகிய இவ்விரதகாலத்திற் சுவாமி கும்பிட வேண்டிய ஒழுங்கு, இதனை அநுட்டிக்க வேண்டிய முறை, புத்தி பூர்வமாகவும் அபுத்தி பூர்வமாகவும் அநுட்டித்தோர் பெற்றபேறு முதலியவற்றை இனிய தமிழ் வசன நடையில் விளக்குவது;

விலை சதம் 40

வில்லி பாரதம்-புட்ப யாத்திரைச் சருக்கம்

பண்டிதர், ம. வே. திருஞானசம்பந்தப்பிள்ளை எழுதிய நன்பொருள் விளக்க விரிவுரை, நூலாசிரியர் வரலாறு முதலியவற்றுடன், 1951ம் 52ம் ஆண்டுகளில் நடக்கும் தமிழ் ஆங்கில S. S. C. (எஸ். எஸ். ஸீ.) பரீட்சைகட்குப் பாடமாக விதிக்கப்பெற்றுள்ளது. (2-ம் பதிப்பு அச்சில்)

அரிச்சந்திர புராணம் - மயானகாண்டம்

மேற்படி பண்டிதர் எழுதிய பொழிப்புரை இலக்கணக் குறிப்பு, நூலாசிரியர் வரலாறு முதலியவற்றுடன் உயர்தர வகுப்புக்களுக்குச் செய்யுட் பாடமாக விதிக்கப்பெற்றுள்ளது.

விலை சதம் 75.

மாணிக்கவாசகசுவாமிகள் சரித்திரம் திருவாசகத்திரட்டுடன்

மேற்படி பண்டிதர் எழுதியது; கொழும்பு விவேகானந்த சபையார் நடத்தும் சைவசமயபாடப் பரீட்சை மேற்பிரிவிற்குப் பாடமாகவிதிக்கப்பட்டது. விலை ரூ. 1—20 ச.

உலகம்பலவிதக் கதை I. (கோபால நேசரத்தினம்)

ஷை பண்டிதர் எழுதியது. படிக்கப் படிக்கத் தெவிட்டாதது.

விலை ரூ. 1—25 ச.

சைவ சமயசாரம்:

ஆசிரியர் சு. சிவபாதசுந்தரம் (B. A.) அவர்கள் எழுதியது. கொழும்பு விவேகானந்த சபையார் நடத்தும் சைவசமயப் பரீட்சைப் பாடங்களுளொன்று யுள்ளது. விலை சதம் 45

"ஆறுமுகநாவலர்" (ஆங்கிலத்தில்)

சைவப்பெரியார் சு. சிவபாதசுந்தரம் (B. A.) எழுதியது; ஆங்கில மறிந்தோர் எவரும் படிக்கத் தக்கது. முந்தி வெளிவராதது.

விலை 60 சதம் (அணு 10)

முற்பண மனுப்புவோர்க்குத் தபாற் செலவின்றிப் புத்தகங்கள் அனுப்பப்படும்

Apply: to
PANDIT V. T. SAMBANDHAN
Vannarponnai, Jaffna.

## இலங்கை வங்கி

(1938-ம் ஆண்டு 53-ம் இலக்கக் கட்டளைச் சட்டத்தின்படி சட்டபூர்வமாக இணைக்கப்பட்டது)

இலங்கை அரசாங்கத்தின் வங்கிக்காரர்

| | |
|---|---|
| பதிவுசெய்யப்பட்ட மூலதனம் | 7, 500, 000-00 |
| கொடுக்கவிருக்கும் ,, | 4, 500, 000-00 |
| கொடுபட்ட ,, | 4, [illegible] 000-00 |
| நிலைதரமான சேமநிதி | 3, 000, 000-00 |

தலைமைக்காரியாலயம்:- பிரிஸ்டல்வீதி, கொழும்பு.

நியுயோர்க் ஏஜெண்டுகள்:- ஏர்விங் ட்ரஸ்ற் கம்பனி.

லண்டன் காரியாலயம்:- 4-6-8 லுட் கேட் ஸேர்கஸ், லண்டன்.E. C. 4.

கிளைக்காரியாலயங்கள்:- புறக்கோட்டை,(கொழும்பு) கண்டி, காலி. திருக்கோணமலை, பாணந்துறை, குருநாகலை (பழையநகரமண்டபம்),வதுளை மட்டக்களப்பு.

யாழ்ப்பாணத்துக்காரியாலயம்:-242ஆஸ்பத்திரிரோட்,யாழ்ப்பாணம்

வாடிக்கைகாரர்களுக்குப் பல விசேஷ வசதிகளை இவ்வங்கி செய்து கொடுக்கின்றது.

நடைமுறைக் கணக்கு: இலங்கையில் (திருக்கோணமலை வதுளை மட்டக்களப்பு ஒழிந்த) உள்ள எல்லாப் பிரதான நகரங்களிலும் மாற்றக்கூடிய "செக்"குகள் கொமிஷன் இன்றிப்பெற்றுக் கொள்ளப்படும்.

சேமிப்புப் பணம்: ஆகக்கூடிய தொகை ரூபா 10, 000. வட்டி நூற்றுக்கு வருடம் ஒன்றுக்கு 2 விகிதம் சேட்டநேரம் திருப்பிக் கொடுக்கப்படும்.

நிரந்தர சேமிப்பு: இதற்கான விகிதம் முதலியவற்றைக் கேட்டு அறிந்து கொள்ளலாம்.

கடன்களும் மேலதிகமாகக் கடன் பெறுதலும்: அங்கீகரிக்கப்பட்ட பிணையின் பேரிற் கொடுக்கப்படும்.

நாணயமாற்று: இதற்கான ஏஜெண்டுகள் உலகெங்கும் உண்டு. பிறநாட்டுவிவகாரப்பகுதி: ஜி.ஓ.எச்.கட்டிடம், யோர்க்வீதி,கொழும்பு.

இந்தியா, மலாய் நாடுகளுக்கு அனுப்பக்கூடிய உண்டியல், தந்தி, மாற்றுப் பத்திரங்கள் விஷயமாக விசேஷ வசதிகள் செய்து கொடுக்கப்படும்.

L P. N சிங்கம்

ஏஜெண்டு

வான்முகில் வழாதுபெய்க மலிவளஞ் சுரக்க மன்னன்
கோன்முறை யரசுசெய்க குறைவிலா துயிர்கள் வாழ்க
நான்மறை யறங்களோங்க நற்றவம் வேள்வி மல்க
மேன்மைகொள் சைவநீதி விளங்குக வுலக மெல்லாம்.

Printed and Publishe[d] by S. P. Kandiah, F. I. S. A. (Lond) residing at 245, Navalar R[oad], Jaffna, for and on behalf of the Proprietors the Saiva Parip[alana] Sabai, Jaffna, at their Press, the Saiva Perakasa Press, [Vanna]rponnai, Jaffna, on Friday May 4, 1951